விலை சதம் 10

# சுதந்திரன்
SUTANTIRAN

வ. ஆ. 2001, பங்குனி 28 உ வெள்ளி (10-4-70) ஸபர் பிறை 3 — புத்தகம் 24 இதழ் 9


# "அல் அக்ஸா எரிப்புக்கு தமிழரசார் காட்டிய எதிர்ப்பு இதை முஸ்லிம்கள் ஒருபோதும் மறவார்!"

## கல்குடாவில் ஜனாப் நாகூர் லெப்பை விளக்கம்!

### மறத்தமிழன் மாணிக்கவாசகருக்கு முஸ்லிம்கள் பேராதரவு!

புனித அல் அக்ஸா பள்ளிவாசலுக்கு இஸ்ரேலியர்கள் தீ வைத்த துக்ககரமான சம்பவத்தின் போது அந்த மிலேச்சத்தனத்துக்கு தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது தமிழரசுக் கட்சி. இதை இந்நாட்டு முஸ்லிம்கள் ஒருபோதுமே மறக்க முடியாது. தேசிய அரசாங்கத்தையும், முஸ்லிம்களால் தெரிவு செய்யப்படட் கல்குடாவின் முன்னாள் பா. உ. திரு. தேவநாயகத்தையும் விட இப்பிரச்சினையின் போது, இஸ்ரேலியர்களின் கொடுமையை எதிர்த்து, முஸ்லிம் மக்களின் பக்கம் தமிழரசுக் கட்சி நின்றதை முஸ்லிம் மக்கள் இதற்குள் மறந்திருக்க முடியாது"

—இவ்வாறு கல்குடாத் தொகுதியிலுள்ள ஓட்டமாவடி ஜும்ஆத் பள்ளிவாசலில் வைத்து ஜனாப். எம். நாகூர் லெப்பை தெரிவித்தார்.



அண்மையில் வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையின் போது கல்குடாவின் தமிழரசு வேட்பாளர் திரு. மாணிக்கவாசகர், ஓட்டமாவடி முகையதீன் ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு விஜயம் செய்தார். முஸ்லிம் மக்களைச் சந்தித்து அளவளாவினார். திரு. மாணிக்கவாசகருடன் எழில் தமிழ் ஆளர் திரு செ. இராசதுரையும் உடன் சென்றிருந்தார்.

இச்சந்திப்பின் போது தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகள் பற்றி அங்கு திரண்

(4-ம் பக்கம் பார்க்க)

## நேமிநாதனுக்கு வரவேற்பு

திருகோணமலை, ஏப். 4—

திருக்கோணமலை தமிழரசு வேட்பாளர் திரு. பா. நேமிநாதன் அவர்களுக்கு எதிர் வரும் 28-ந் திகதி பிரமாண்டமானதொரு வரவேற்பை அளித்து அத்துடன் ஒரு பொதுக் கூட்டத்தினையும் நடாத்துவதற்கு செல்வநாயகபுர பொது மக்களும் இளைஞர்களும் ஒழுங்கு செய்து வருகின்றனர்.

இவ் வரவேற்பு ஏற்பாடுகளை முன்னின்று செய்து வரும் செல்வநாயகபுர இளைஞர் மன்றம் இவ்வரவேற்பு வைபவத்திற்கு தமிழரசுத் தலைவர்களையும் அழைப்பதெனமுடிவுசெய்திருக்கின்றது.

## திருமலையில் கொடி அறுக்கப்பட்டதன் பின்னணி என்ன?

திருகோணமலை, ஏப். 9—

இம் மாதம் 3ந் திகதி திருகோணமலைப் போலிசார் தெருக்களில் பறக்க விடப்பட்டிருந்த தமிழரசு மூவர்ணக் கொடிகளை அறுத்ததோடு அத்துமீறிக் கட்சி கிளை நிலையத்தின் கொடியைப் பிடுங்கியதும், தமிழரசுத் தொண்டரொருவரின் கையிலிருந்த கொடியைப் பறித்துத் தூஷணை வார்த்தைகளால் சிங்களத்தில் பேசியதும் யாவருக்கும் தெரிந்ததே!

இது விடயமாக திருகோணமலையில் இளைஞர்கள், நேமிநாதன் அவர்கள் வீட்டை முற்றுகையிட்டதன் பேரில் திரு. நேமிநாதன் இளைஞர்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி எடுத்த நடவடிக்கையினுல், போலி

(4-ம் பக்கம் பார்க்க)

## காங்கிரஸ் கோட்டை இடிகிறது

தொண்டமானாறு ஏப், 8.

திரு. பொன்னம்பலம் பிறந்த ஊரான அவ்வாய்ப் பகுதியில் உள்ள மாலைசந்தி என்னுமிடத்தில் கடந்த 10 வருட காலமும் த. கா. கட்சி தவிர வேறெருவருக்கும் கூட்டம் நடத்த இடம் கொடுப்பதில்லை. சிவசிதம்பரத்தின் கருங்கல்லுக் கோட்டை என்று த. காங்கிரசார் பட்டம் சூட்டப்பட்ட இந்த இடத்தில் தற்போது தமிழரசின் கொடி பறக்க ஆரம்பித்து விட்டது.

சிவசிதம்பரம் உபசபாநாயகர் பதவி பெற்றதும் இதேயிடத்தில் வரவேற்புக் கூட்டம் ஒன்றுக்கு ஒழுங்கு செய்யமுற்பட்டபோது அது நடைபெருவண்ணம் அவ்வூர் மக்கள் தடுத்துவிட்டனராம்.

இதே மாலை சந்தியில் கடந்த மாதம் 15-ம் திகதி

(4-ம் பக்கம் பார்க்க)

யூ. என். பி. ஆட்சியில்

## திருமலையின் தமிழ்ப்பெயர்கள் சிங்கள மயமாகின்றன!

திருகோணமலை, ஏப். 9—

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த தம்பலகாமம், கந்தளாய் ஆகிய ஊர்களின் பெயர்கள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் முறையே 'தம்பலகமுவ' 'கந்தளே' என மாற்றியமைக்கப்பட்டுள்ளது. தூய தமிழூர்களின் பெயர்கள் மேற்படி சிதைவுற்றது அவ்வவ்வூர்களின் புகையிரத நிலையங்களின் பெயர்ப் பலகைகளிலாகும். புதிதாக மாற்றப்பட்ட பலகைகளில் பலர் கண்களையும் கவரக் கூடிய பெயர்ச் சிதைவுகள் நாளாவட்டத்தில் சிங்கள மயமாக்கும் திட்டத்தின் அடித்தளமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## கண்ணதாசன் மணியன் ஈழம் வருகிறார்கள்

இலங்கையில் நடைபெறும் நேரு நினைவுக் கொண்டாட்டங்களில் பங்குபற்றுவதற்கென தென்னகத் திரை உலக கவிஞரும் கவியரசருமான திரு. கண்ணதாசன், 'ஆனந்த விகடன்' துணையாசிரியர் திரு. எஸ்.வி.எஸ். 22-ம் திகதி வருகிறார்கள்.

## சிங்கள சிறீயுடன் தமிழ்சிறீயையும் பொறிக்குக!

### தமிழ் பகுதி உள்ளூராட்சிமன்றங்களுக்கு தமிழணிச்சபை கோரிக்கை!

தமிழ்ப் பகுதியிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் அனைத்திலும் சிங்கள சிறியுடன் சேர்த்து தமிழ் சிறியையும் பொறிக்க வேண்டும் என்றும் இப்படிச் செய்வதன் மூலம் தமிழ் மொழிச்சட்ட விதிகளை அமுல் நடத்தும்படி அரசாங்கத்தை தூண்டவேண்டும் என்றும் தமிழணிச்சபை யாழ், மட்டுநகர், மாநகர சபைகளுக்கும் திருமலை நகரசபைக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக தமிழணிச்சபை விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:—

இலங்கையின் தமிழ்மொழி விசேட உபயோக விதிகளின் படி சிங்களத்துடன் தமிழுக்கும் சம அந்தஸ்து தர அரசினர் தவறிவிட்டதால் இச்சட்ட விதிகளைத் துணையாகக் கொண்டு இலங்கை அனைத்திலும் தமிழ்மொழியை உபயோகப்படுத்தும் இயக்கத்தினை மேற்கொள்வோரின் முயற்சிக்கு இலங்கைத் தமிழணிச்சபை ஆதரவு திரட்டி வருகிறது.

இதற்கு முதற்படியாக தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மொழியின் உபயோகத்தைத் தமிழ்பேசும் மக்களின் நாளாந்த செயல்கள் முதற்கொண்டு அரசினர் அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்த ஏற்பாடுகளைச் செய்ய உள்ளோம். இந்த முயற்சிக்கு ஆதரவு தரும் முகமாக தங்கள் மாநகரசபைக்கு உரித்தான வாகனங்கள் அனைத்திலும் சிங்கள சிறியுடன் தமிழ் ஸ்ரீயும் சேர்த்துப் பொறித்துக் கொள்ள வேண்டும். இதற்கான பிரேரணை ஒன்றினையும் சபைக்கூட்டத்தில் நிறைவேற்றி உடன் நடவடிக்கை மேற்கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறோம்.

தமிழ்மொழிச் சட்ட விதிகளால் சிங்களம் மட்டும் சட்டம்

# படுகொலை!

## சிறிமாவுக்கு மகஜர் சமர்ப்பணம்!

தமிழரசுக்கட்சி யூ. என். பிக்கு கொடுத்த நெருக்கடியினால் யூ. என். பி. ஆட்சியின் கீழ் சிங்களம் மட்டும் சட்டம் எப்படியெப்படிக் 'கொலை' செய்யப்பட்டுள்ளதென்பதை உத்தியோக மொழித் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவிடம் சுட்டிக்காட்டியிருப்பதாக தெரிகிறது.

திருமதி சிறிமாவிடம் அவர்கள் சமர்ப்பித்துள்ளதாக கூறப்படும் அறிக்கையொன்றில், பின்வரும் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாக 'சன்' ஏடு 9.4.70 ஒரு முன்பக்கச் செய்தியை வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:

● தமிழ் மொழி விசேட விதிகள் சட்டத்தின் கீழ் 760 வது திறைசேரிச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டதாலும் தமிழ் அரசாங்க ஊழியர் சம்பந்தப்பட்ட 700, 701 வது திறைசேரி சுற்றறிக்கைகளாலும் சிங்கள மொழி அமுல் தடுக்கப்பட்டிருக்கிறது;

● சிங்களத்தில் தேர்ச்சி பெறாத ஊழியர்களைத் தண்டிக்கும் உரிமை உ தியோக

(4-ம் பக்கம் பார்க்க)

உள்ளூர்வாசிகள் வேலையற்றிருக்க வெளியூரிலிருந்து

## சிங்களவர் இறக்குமதி!

திருகோணமலை, ஏப். 9—

'திருகோணமலையிலே வேலையற்ற—படித்த வாலிபர்கள் பலரிருக்க வெளியூர்களிலிருந்து—அதுவும் சிங்களவர்களை வேலைக்காக இறக்குமதி செய்வது ஏன்?' இத்தகையவொரு அங்கலாய்ப்பு திருகோணமலை வேலையற்ற இளவட்டங்களிடையே எழுந்துள்ளது.

திருகோணமலை மாவட்டத் தொலைபேசி அலுவலகத்தில் உண்டாகும் வெற்றிடங்களை நிரப்புதற்கு திருகோணமலை வாலிபர்களை அமர்த்தாது கொழும்பிலிருந்து புதிதாக எடுக்கப்பட்ட சிங்களவர்கள் அனுப்பப்படுவதே மேற்படிக் கொதிப்பை வாலிபர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

## தமிழ் காங்கிரசை யூ. என். பி. ஆதரிக்கும்

கொழும்பு—ஏப்-9

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தான் போட்டியிடாத தொகுதிகளில் தமிழ்காங்கிரசுக்கு பூரண ஆதரவு வழங்குவதென ஐ. தே. கட்சி முடிவு செய்துள்ளது. ஐ. தே. கட்சி கிழக்கில் ஒன்பது தொகுதிகளிலும் மன்னாரிலும் தனது வேட்பாளர்களை நிறுத்தியிருக்கிறது. 126 தொகுதிகளுக்கு 128 வேட்பாளர்களை ஐ. தே. க. நிறுத்தியிருக்கிறது:—



## செல்வாவின் தேர்தல் கட்டுப்பணத்தை மாவிட்டபுரம் மக்கள் செலுத்துவர்!

மாவிட்டபுரம், ஏப். 7—

தமிழரசு தந்தையின் கட்டுப்பணத்தைச் செலுத்த போட்டிபோடுகின்றனர் தொகுதி மக்கள்.

வருகிற பொது தேர்தலில் காங்கேசன்துறை தொகுதியில் தமிழரசுக்கட்சி வேட்பாளராகப் போட்டியிட இருக்கும் சா. ஜே. வே. செல்வநாயகத்தின் தேர்தல் கட்டுப்பணத்தை செலுத்துவதற்கு காங்கேசன்துறை தொகுதிக்குட்பட்ட கட்டுவன், தெல்லிப்பழை, மாவிட்டபுரம் பகுதி மக்கள் போட்டி போடுகின்றனர்.

தற்போது மாவிட்டபுரம் பகுதி மக்கள் கட்டுப்பணத்தை சேகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# எண்ணம்

## சட்டத்துறையிலும் தமிழ் மட்டந்தட்டப்படுகிறது!

சிறுபான்மை மக்களின் உரிமைப் பாதுகாப்பு பற்றியும் சனநாயகம் பற்றியும் மேடை தவருமல் பேசிவருகிருர் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா.

ஆனல் அவரும் அவரது கட்சியும் தமிழ் பேசும் மக்களுக்காக வடிப்பதெல்லாம் வெறும் நீலிக் கண்ணீர்தான்; வாக்கு வேட்டையாடும் தந்திரம்தான்; சிறிதுகூட அந்தரங்க சுத்தியுடையதல்ல; என்பதை தமிழ் பேசும் மக்கள் சம்பந்தப்பட்ட எந்த ஒரு பிரச்சினையிலும் ஆட்சி பீடம் காட்டி வரும் அக்கறையீனம் துலாம்பரமாக எடுத்துக்காட்டுவதாயிருக்கின்றது!

1966ம் ஆண்டு தமிழ்மொழிச் சட்டவிதிகளை—ஒரு பௌத்த பிக்குவைச் சுட்டுக்கொல்ல நேர்ந்த போதும் ஆட்சியாளர் நிறைவேற்றி வைத்தனர் என்ருல்—அது மனம் மாறியோ, தமிழினத்தின் உரிமைகளை வழங்கிவிட வேண்டும் என்ற நல்லெண்ணத்தாலோ அல்ல; தமிழரசுக் கட்சியினர் கொடுத்த நெருக்கடியால்தான் அச்சட்டம் நிறைவேற்றப்பட்டது!

அச்சட்டத்தை அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்கு அவர்களது மொழியுரிமைகளை வழங்க வேண்டும் என்ற பேரார்வத்தால் உந்தப்பட்டு கொண்டு வந்திருக்குமானல், அச்சட்டவிதிகளை ஒழுங்காக நடைமுறைப்படுத்தி தமிழ் பேசும் மக்களின் கஷ்டங்களை நீக்கியிருக்கும்; போக்கியிருக்கும்!

ஆனல் தமிழ் மொழி சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அதை அரசாங்கம் ஐஸ் பெட்டிக்குள் போட்டுவிட்டது; அச்சட்டத்தின் கீழ் திறைசேரி அறிக்கையை வெளியிடச் செய்து சட்டவிதிகளை நடைமுறைப்படுத்த வைப்பதற்கு தமிழரசார் எவ்வளவுதூரம் பாராளுமன்றத்திலும் வெளியிலும் போராட வேண்டியிருந்தது; எத்தனை தூதுக்குழுக்கள் அனுப்பி பிரதமரைத் தூண்டவேண்டியிருந்தது; என்பதை இந்நாட்டு தமிழ் மக்கள் கூர்ந்து கவனித்திருக்கிருர்கள்!

இதே போலவே தமிழரசாங்க ஊழியர் பிரச்சினையிலும் தமிழரசாருக்கு கொடுத்த வாக்குறுதிகளையும் அதையொட்டி வெளியிட்ட திறைசேரி சுற்றறிக்கைகளையும் மீறி தான்தோன்றித்தனமாக யூ. என். பி. அரசு நடந்து வருகிறது. தமிழினத்தின் உரிமைகளை வழங்கவேண்டுமென்ற சுயேச்சையான ஆசை யூ. என். பிக்கு இருந்திருந்தால் இப்படியெல்லாம் செய்யுமா?

யூ. என். பி. தனிச் சிங்கள வெறிபிடித்த ஒரு கட்சி. அந்த கட்சியின் ஆட்சியிடமிருந்து ஒரு சில உரிமைகளாவது சட்டரீதியாக தமிழ் பேசும் மக்களுக்கு கிடைத்தனவென்ருல்-அது தமிழரசுக் கட்சியின் சாமர்த்தியமும் விடாமுயற்சியுமே அன்றி வேறில்லையென்பதை எவருமே மறுக்க முடியாது.

யூ. என். பி. ஆட்சி தமிழினத்திற்கு நல்லது செய்ய விரும்பவில்லை; நாசம் செய்யவே விரும்புகிறது என்பதற்கு மற்ருேர் உதாரணம் சட்ட நூல்கள் மொழிபெயர்ப்பில் தமிழ் மொழி முற்ருகப் புறக்கணிக்கப்படுவதாகும்!

சட்ட நூற்கள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வரும் அதே வேளையில் தமிழ் மொழி பெயர்ப்புத்துறையில் ஒரு சிறுமுயற்சி கூட நடைபெறவில்லையாம்.

ஏன் இந்த ஓரவஞ்சனை! ஏன் இந்த பாரபட்சம்!

தமிழ் பிள்ளைகளின் போதனுமொழி அவர்களது தாய் மொழியே எனும் கொள்கையை அரசு ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் தமிழில் போதிய சட்ட நூற்களின்றி சட்டத்துறை பயிலவிரும்பும் மாணவர்கள் என்ன செய்ய முடியும்?

சட்டத்துறை பயில்பவர்கள் அனைவரும் சிங்களத்திலேயே பயில வேண்டும் என்று அரசாங்கம் சிங்களத்திணிப்பில் இறங்கப்போகிறதா? அல்லது தமிழ் பேசும் மக்கள் சட்டத்துறையில் முன்னணி வகிப்பது அரசின் கண்களை குத்துகிறதா?

சட்டத்துறையிலிருந்து தமிழ் பேசும் மக்களை முற்ருக ஒழித்துக்கட்டும் சதிக்கு முன்னேடித் திட்டமா இது?

சட்டத்துறையிலிருந்து தமிழ் பேசும் மக்களை ஒழித்துக்கட்டி நீதிமன்றங்களில் சிங்களத்தை திணிப்பதற்கு சுதந்திரக் கட்சி அரசாங்கம் நிறைவேற்றிவைத்த நீதிமன்ற மொழிச் சட்டம் அப்படியே இருக்கிறது. தமிழரசுக் கட்சியின் கடுமையான எதிர்ப்பினுல் அச்சட்டத்தை அமுல் நடத்த யூ. என். பி. துணியவில்லை.

ஆனல் இப்போது திடுதிப்பென்று சட்ட நூல்களை சிங்களத்தில் மொழிபெயர்ப்பதில் மும்முரமாக இறங்கியுள்ள அரசு தமிழ் மொழி பெயர்ப்பு வேலைகளை முற்ருகப் புறக்கணித்து வருகிறது.

தமிழில் சட்ட நூற்களை மொழிபெயர்க்க தகுதியுடையவர் இல்லையென்றும் ஆட்சிபீடம் சாட்டுக கூறிட முடியாது.

இவ்வேலையைச் செய்வதற்கு தகுதி படைத்தவர்கள்—திறமையுடையவர்கள் ஏராளமானேர் இருக்கவேயிருக்கிருர்கள்.

சிங்களத்தை மட்டுமே சட்டத்துறை பயிலும் மொழியாக்க அரசு முயலுமானல் தமிழினம் அதற்கு எதிராக பெரும் போராட்டத்தில் குதித்தேதீரும்.

சட்டத்துறை நூல்களை தமிழில் மொழி பெயர்க்கும் பணியினையும் அரசு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தும் அதேவேளையில் சட்டத்துறை விற்பன்னர்களாக விளங்கும் தமிழர்களும் இதில் தங்கள் கவனத்தை செலுத்த வேண்டும்.

சிங்கள ஆட்சி பீடம் தமிழில் சட்ட நூற்களை மொழி பெயர்க்கும் என்று ஒதுங்கியிராது, சுதந்திரமாக தாங்களே ஒரு குழு அமைத்து சட்ட நூல் மொழி பெயர்ப்பு வேலைகளை உடனடியாக தொடங்கவேண்டும். இது தமிழ்க் கல்விமான்களாக விளங்கும் சட்டத்துறை அறிஞர்களது கடமை; தமிழினத்துக்கும் தமிழ் தாய்க்கும் செய்யவேண்டிய சேவை!

இதை அவர்கள் முன்வந்து செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்ருேம்—

# தமிழினம் தலைநிமிர்ந்து வாழ

# அதற்கொரு தாயகம் அவசியம்!

இலங்கைவாழ் தமிழ்ப் பெருங்குடி மக்கள் இன்று மிக முக்கியமான அரங்கத்தில் நின்று கொண்டிருக்கிருர்கள்: அவர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவரும் இந்த ஈழ நாட்டிலே அவர்கள் தொடர்ந்தும் வாழப் போகிருர்களா? வாழமுடியுமா? அல்லது அழிந்தொழிக்கப்படப் போகிருர்களா? என்ற ஆபத்தான ஒரு சூழ்நிலையிலே வாழ்கிருர்கள்.

மொழி அழியாதிருக்க வேண்டுமா? இலக்கியம் ஒளி மங்காதிருக்கவேண்டுமா? மதம் போற்றிப் பேணப்பட வேண்டுமா? கலாச்சாரம் காப்பாற்றப்படவேண்டுமா: இவையெல்லாம் எதற்காக? இனத்துக்காக. எனவே இனம் வாழ்ந்தாக வேண்டும். தன் சொந்த மண்ணிழந்து இனம் வாழவே முடியாது.

### பிரதேசம் வேண்டும்


ஒரு இனம் சீரும் சிறப்பும் பெற்று வாழவேண்டுமானல் அதற்குரிய பிரதேசம் காப்பாற்றப்பட வேண்டும். ஒரு நாட்டில் ஒரு தேசிய இனம் தனித்துவம் பெற்று உரிமையோடு வாழ முதலில் பிரதேசம் - அதாவது தாயகம் - இருக்கவேண்டும். உறைவிடம் இன்றியமையாதது. அது அற்ருர் நாடோடிகள்—நாடோடிகள் நல்லபடியாக வாழ்வதில்லை. இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் எமது தாயகமாகும்.

### குடியேற்ற ஆபத்து

திட்டமிடப்பட்ட குடியேற்றத்தின் மூலம் எமது தாயகத்தைத் தமதாக்கி இனப்படுகொலைக்குத் தூபம் போடுகிறது ஆட்சிக்குழு.

### இனப்படுகொலை

கிழக்கு மாகாணம் ஒரு காலத்திலே தனித் தமிழ்ப் பகுதியாகவே இருந்து வந்தது. பச்சைப் பசேலெனக் காட்சிதரும் நெல்வயல்களும், பாடும் மீன்களும் இன்றும் அந்த மாகாணத்தின் முதிசம்கள். இந்த மாகாணத்திலேயிருந்து இன்று அம்பாரை என்ற தொகுதிக்கு ஒரு சிங்களப் பாராளு



மன்ற உறுப்பினர் தெரிவு செய்யப்படுகின்ருர், ஆச்சரியமாக இல்லையா? எப்படி இது ஆனது? தமிழ் பேசும் இஸ்லாமிய பெருங்குடி மக்கள் வாழ்கின்ற மூதூர்

**வே. செழியன்**

போன்ற இடங்களிலே, தமிழன் சிறப்பு நகரமெனத் தேவாரப் புகழ் பெற்ற திருமலையிலே, நகராண்மைக் கழக உறுப்பினர் ஒருவர் சிங்களவராக வரும் அளவுக்கு வந்து விட்டதே! அது எப்படி? வடக்கு இலங்கையின் எல்லையில், வன்னியர் பரம்பரை இனமாக அடங்

### இனப்படுகொலை

இனப் படுகொலை என்பது ஒரு தொகையான மக்களைக் கொலை செய்வது என்று மட்டுமே பொருள் படும் எனக் கொள்வது தவறு. பல பேரைக் கொலை செய்வது பலாத்கார வழியால் அடக்கியொடுக்கி நசுக்குவது. தொகையான மாணவர்களை வெளியேற்றுவது. நாட்டை விட்டு ஆயிரக்கணக்கான மக்களை விரட்டி விடுவது எல்லாமே இனப் படுகொலை என்பதேபொருந்தும். ஒரு இனத்தை மட்டந்தட்டிவிட அந்த வழி உதவுமென்ருலும் பூரணமாக இந்த மார்க்கம் மட்டும் அனுசரணை ஆகாது. இதனேடேயே ஒன்றில் வெளிநாட்டு மக்கள் குடியேற்றமோ அன்றேல் குடியேற்றத்திட்ட மூலம் மக்களைப்பெருக்குவதோ நடைபெருவிட்டால் இனப் படுகொலை அவ்வினத்தை ஒழித்துவிடப்போதுமானதாகாது. இப்படிக் குடியேற்றுவதன் மூலம் மட்டுமே, ஒரு பகுதியிலே வாழ்கின்ற பெரும்பான்மையினரைச் சிறுபான்மையினராக்கி, அதைத்தொடர்ந்து, அவர்கள் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பையும் தம் கைக்குள்ளே வைத்துக் கொள்ள முயலலாம்.

### சர்வதேச ஜூரிகள் தீர்ப்பு

தங்களுக்குச் சொந்தமான ஒரு பகுதியிலே தங்கள் மொழியைச் செவ்வனே பேணி, தம் கலாசாரத்தைக் காத்து வளர்த்துத் தம் மத சுதந்திரத்தை இடுக்கண் எதுவுமின்றி அனுபவித்து வருகின்ற சிறுபான்மை இனத்தின் பெரும்பான்மை மக்களை அவர்கள் பகுதியிலேயே சிறுபான்மையோர் என்ற நிலைக்குத்தள்ள முயலும்

# சிங்களக் குடியேற்றத்தால்

# இனத்துக்கு ஏற்பட்டுள்ள பேராபத்து

எமக்கு என ஒருபகுதி இருக்கவேண்டும் என்பதன் அத்தியாவசியத்தை கடந்தகால இனக்கலவரம் எமக்கு நன்குணர்த்தி விட்டது. சிங்கள்த் தீவிர வகுப்புவாதிகள் எம்முயிரைப் பலிகேட்ட போது, இரத்தத்தை உறிஞ்சி வெறிகொண்டு அலைந்தபோது, எம்மாதரார் கற்பையெல்லாம் கொத்தித்தின்னப்பாய்ந்து நின்றபோது, ஓடிவந்து புகலிடமெய்திேம் — எமக்கென ஒருபகுதி — நிலப்பரப்பு — தாயகம் இருந்ததால், இப்படியான அற்பவசதிகள் கூட எம்மினத்துக்கு இருக்கக்கூடாது என்றுவிருப்புகிறது இன்றைய ஆட்சிபீடம்—தனிச்சிங்கள கொடுங்கோல் ஆட்சிபீடம்,

காத் தமிழர் தனித்து வாழ்ந்து வந்த வவுனியாவிலே எம்மைக் கருவறுக்கும் பதவியாக்களும் சிங்களப் பிரிவுக் காரியாதிகாரி அலுவலகமும் இடம் பெற்று விட்டனவே? இது எவ்வாறு?

திட்டமிடப்பட்ட குடியேற்றங்களாலேயே இது சாத்தியமாகியது. உதாரணமாக கிழக்கு இலங்கை மக்கள் நலனுக்கெனச் சொல்லப்பட்ட கல்லோயாத் திட்டத்தில் குடியேற்றப் பட்டோர் தென்னிலங்கையிலிருந்து கொண்டு செல்லப் பட்ட சிங்கள மக்களாவர். நூற்றுக்குத் தொண்ணூற்ருன்பது வீதமானேர் அவர்களே. பாரம்பரியமாகவே தமிழர் பிரதேசமான அம்

எந்த நடவடிக்கையும் இனப் படுகொலையே ஆகும் இதுவே திபெத்திய நிலைகுறித்து விசாரணை நடத்திய சர்வதேசஜூரிகள் கமிசனின் முடிவான அபிப்பிராயமுமாகும். சாதாரணமாகக் கொலை என்று கொள்ளப்படும் பொருள் இனப் படுகொலைக்குச் சரியானதல்ல. ஒரு நாட்டிலே தனித்துவம் நிரம்பிய பத்து லட்சம் மக்களைக் கொண்ட ஒரு இனம் வாழ்கின்றது என்று வைத்துக்கொள்வோம். அவர்களுக்கெனத் தனி இதிகாசம் கலாசாரம், மொழி என்பனவும் உண்டு என்றும் எண்ணிக் கொள்வோம். அந்த மக்களை அழித்தொழித்து விடும் நோக்கமாக அவர்க

# ஈழத்தில் நடைபெறும் இனப்படுகொலை!

ஆபத்தான காலங்களில் எமது இனத்துக்குப் புகலிடங் கூட இருக்கக் கூடாது என்று விரும்புகின்ற சிங்கள அரசாங்கங்கள் தமிழர் பிரதேசங்களில் குடியேற்றத் திட்டமென்ற சாக்கில் சிங்களவரையே குடியேற்றி வருகின்றன. அதன் மூலம் தமிழர் பிரதேசங்கள் சிங்களப் பிரதேசங்களாகி, எங்களிடங்களிலேயே நாம் சிறுபான்மையினரென்ற நிலைக்குத் தள்ளப்பட்டு வருகிருேம். இது எமது பேராபத்துக்கான அத்திவாரம் - கட்டிடம் எல்லாம்.

பாறைப் பகுதியிலே இன்று சிங்கள மக்கள் பெரும்பான்மையாகிவிட்டனர். அவர்களுக்கென ஒரு பாராளுமன்றப் பிரதிநிதி. ஐம்பதினயிரத்துக்கு அண்மிய தொகையினரான சிங்களவருக்கு- அவர்கள் - வசதிக்கு உகணையிலே ஒரு கச்சேரி. மட்டக்களப்புத் தென்பகுதிப் பழங்குடி மக்களான பல லட்சக்கணக்கான இஸ்லாமியத் தமிழ் மக்களும் அந்த ஆயிரக்கணக்கானவர்கள் வசதிக்காக ஏற்பட்டுள்ள கச்சேரிக்குப் போகவேண்டும், என்ற கட்டளை. இதை ஒரு இனப் படுகொலை என்றே கொள்ளவேண்டும்:

ளில் மூக்கால்வாசிப் பேரைச் சுட்டுக் கொன்றுவிட்ட பின்னரும், எஞ்சியிருக்கும் காற்பங்கு மக்கள் இன்றும் அந்தப் பகுதியிலே பெரும்பான்மையினராக இருந்தால், அது இனப் படுகொலையாகாது. ஆனல் ஒருவரைக் கூடக் கொலை செய்யாமல் இந்த மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதியிலே வேற்று மொழி பேசுகின்ற, வேறு கலாசாரம் பண்பாடு என்பனவற்றைப் பேணுகின்ற, வேறு வித வாழ்க்கைமுறையைக்கடைப்பிடிக்கின்ற ஒரு இனத்த

(3-ம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்றத்துள்ளும் வெளியிலும் தமிழுரிமைக்காக தொடர்ந்து போரிடுவோம்!

## தமிழரசு கொள்கைகளை விளக்குகிறார் கதிரவேற்பிள்ளை



கோப்பாய்த் தொகுதியின் குலவிளக்கு — வன்னியசிங்கத்தின் வழிவந்த வாரிசு — கொலை விழுந்தாலும் கொள்கைவிட்டகலாத இலட்சியவாதி — திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்கள் 'ஈழநாடு'' பத்திரிகைக்கு அளித்துள்ள கருத்தாழம் மிக்க பேட்டியிலிருந்து சிலபகுதிகளை இங்கு தருகிறோம்:-

கே: கட்சி ரீதியாக உங்கள் ஐந்தாண்டு காலச் சாதனைகளைச் சொல்ல முடியுமா?

ப: ஓ, வடிவாகச் சொல்லலாமே! தேசிய அரசாங்கத்தை உருவாக்கி, டட்லி சேனநாயக்காவைப் பிரதம மந்திரியாக்கியது கட்சியின் சாதனை. நாங்கள் இல்லாவிட்டால் அவர் எங்கே பிரதமராக வந்திருப்பார்?

அவரோடு ஒப்பந்தம் செய்து சிங்கள மொழிச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களின் நிலையைச் சீர்படுத்தினோம்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழ்ச் சட்டவிதிகளை அமுல் நடத்தி, அந்தந்தப் பகுதிகளில் தமிழுக்குச் சம அந்தஸ்து பெற்றுக் கொடுத்துள்ளோம்.

மற்றப் பிரதேசங்களில் தமிழில் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளவும், தமிழிலேயே மறுமொழி பெறவும் உரிமை பெற்றுக் கொடுத்த பெருமை தமிழரசுக் கட்சிக்கே உண்டு.

''திட்டமிடப்பட்ட அரசாங்கச் சிங்களக் குடியேற்றம் தமிழ்ப் பகுதியில் நடவாமல் காத்தோம்.

மலைநாட்டு தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அவர்களது நிலைமையைப் பாதிக்கும் சட்டத்திலே இருந்த மூன்று தீமையான அம்சங்களை விலக்கி நன்மையாக்கும் சட்டத்தைக் கொண்டு வந்தோம்''.

கே: தீண்டாமைப் பிரச்சினையைப்பற்றி...

ப: தீண்டாமை ஒழிப்புப் பிரச்சினையில் தேநீர்க் கடைகள், ஆலயங்கள் ஆகியவற்றில் சிறுபான்மைத் தமிழர் என்று சொல்லப்படுவோர் பிரவேசிப்பது பற்றிய பிரச்சினையை பலாத்காரத்தில் தீர்க்காமல் நீதிமன்றங்களுக்கு எடுத்துச் சென்று நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டியுள்ளோம்.

கே: தீண்டாமை ஒழிப்பு, ஆலயப்பிரவேசம் ஆகிய பிரச்சினைகளை சட்டரீதியாக நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்துத்தான் தீர்க்க முடியும் என்று நம்புகிறீர்களா?

ப: ஆம், அப்படித்தான் இவற்றையெல்லாம் அடிபிடி சண்டையில் தீர்த்துவிட முடியாது.

கே; சாதிப்பிரச்சினை வழக்குகளில் நீங்கள் முன்னின்று பேசியிருக்கிறீர்கள். இதன் காரணமாக உங்கள் தொகுதியில் சில பகுதிகளில் ஆதரவு குறைந்து எதிர்ப்பு தோன்றியுள்ளதாகச் சொல்லப்படுகிறதே. உண்மைதானா?

ப: யார் சொன்னது? தமிழ்க் காங்கிரஸ்தான் எதிர்க்கிறது. கோர்ட்டு வழக்கு பேசியதால் எனக்கு ஆதரவு அதிகரித்துத்தான் இருக்கிறது: அதில் சந்தேகமில்லை; ஆனால் காங்கிரஸார்தான் இரண்டு பக்கத்தையும் தூண்டிவிட்டு எதிர்ப்புப் பிரச்சாரம் செய்கிறார்கள்.

கே: தமிழ்த் தேர்தற் தொகுதிகள் எல்லாவற்றிலும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆட்சி மன்றம் சென்றால்தான் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற முடியும் என்று தமிழரசு மேடைகளில் பேசிவருகிறீர்களே அப்படியொருநிலைமை என்றாவது சாத்தியமாகுமென்று எதிர்பார்க்க முடியுமா?

ப: வேற்றுமையில்லாமல் இயங்குவதில்தான் நமது பலம் தங்கியிருக்கிறது ஒவ்வொரு தொகுதியிலும் 100 சதவிகிதமானோர் ஒரே கட்சியை ஆதரிக்காவிட்டாலும் 70 சதவீதமானோர் ஆதரித்தாலே எங்கள் எண்ணம் சாத்தியமாகும்.

கே: தென்னிலங்கையில் இயங்கிவரும் இருபெரும் கட்சிகளும் தமிழரசுப் பிரதிநிதிகளின் ஆதரவு தேவையில்லை அரசாங்கம் அமைக்க என்று சொல்லுகின்றநிலை ஏற்பட்டிருப்பதால், இந்தத் தேர்தலின் பின்னர் ஆட்சி மன்றத்தில் தமிழரசுக் கட்சியின் நிலைமை எவ்வாறு இருக்கும்.

ப: 1965-ம் ஆண்டுவரை இயங்கியது போல் எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு பலம் வாய்ந்த சக்தியாக இயங்குவோம்.

கே: எதிர்க்கட்சிகளும் தமிழரசுக் கட்சியினரைத் தங்கள் அணியில் சேர்த்துக் கொள்ள மறுக்கின்றனவே?

ப: நாங்கள் சுதந்திரமாக எதிர்க்கட்சியாக இயங்குவோம்.

கே: தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த ஒருசில எம். பிக்கள் எதிர்ப்பதால்தான் உங்கள் கோரிக்கைகளைப் பெறமுடியாதுபோகிறது என்று குற்றஞ் சாட்டுகிறீர்களே, பத்துப் பதினைங்கு எம். பி.க்களால் இரண்டு மூன்று எம். பி.க்களின் எதிர்ப்பை சமாளித்து உரிமைகளைப் பெற உழைக்க முடியவில்லையா?

ப: ஒரு கட்டிடத்தைக் கட்டுவதற்குப் பத்துப் பேர் வேண்டுமென்றால், அதே கட்டிடத்தை இடிப்பதற்கு இரண்டு பேர் போதுமே!

வண்டியை இழுப்பதற்கு இரண்டு மாடுகள் வேண்டும்; ஆனால் அதே வண்டியின் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்த ஒரு சிறு கல் போதும். ஆகவே இரண்டு மாடுகளின் பலமா, சிறு கல்லின் தடையா வலுவானது என்று கேட்கமுடியுமா?

கே: தமிழ்ப் பிள்ளைகளின் போதனாமொழி தமிழ் மொழிதானென்று திட்டவட்டமாக ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படியொரு தீர்மானமும் செய்யவில்லை என்று கல்வியமைச்சரும், பிரதம மந்திரியும், அறுதியிட்டுக் கூறியுள்ளார்களே...

ப: முன்பு ஏற்றுக்கொண்டது உண்மைதான், ஆனால் நாங்கள் வெளியேறியபின், மாற்றிச் சொல்கிறார்கள். நாங்கள் வெளியேறிய பின்னர்தான், பௌத்த பாடசாலைகளை நிறுவி சைவத் தமிழ்ப் பிள்ளைகளுக்குச் சிங்களத்தைப் போதனா மொழியாக்கி, அவர்களைப் பௌத்த சிங்களவர்களாக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

கே: நீங்கள் சொல்வது சரியானால், அதைத் தடுக்க என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளீர்கள்?

ப: நாங்கள் நேரடி நடவடிக்கையை மேற்கொண்டு எதிர்ப்போம் என்ற காரணத்தினால்தான் அரசாங்கம் அந்தத் திட்டத்தை அமுல் நடத்தவில்லை.

கே: தமிழ் மக்களின் உரிமைகளை பாராளுமன்ற ஆட்சி முறையின் கீழ் பாராளுமன்றத்தின் மூலமே பெற்றுவிட முடியும் என்று கருதுகிறீர்களா?

ப: அப்படிச் சொல்ல முடியாது. பாராளுமன்றத்துக்கு வெளியில் நாம் நடத்துகிற இயக்கங்கள் தான் பாராளுமன்றத்துக்கு உள்ளே நமக்கு ஒரு பலத்தைக் கொடுக்கும்.

## வேலையற்றோர் பிரச்சினையை தீர்க்கப்போகும் மேதாவிகள்!

வீட்டுக்கு வீடு வாசற்படி.

தொகுதிக்கு தொகுதி வேலையில்லாத் திண்டாட்டம்.

நாட்டிலுள்ள 145 தொகுதிகளிலும் வேலை இல்லாத் திண்டாட்டம் இருக்கின்றது.

நாடு பூராவும் வேலை இல்லாதோர் தொகை பத்து லட்சத்தையும் தாண்டிவிட்டது.

இத்தொகையில் பட்டதாரிகள் சுமார் பதினைந்தாயிரம்.

நாட்டில் உண்மை நிலை இது. ஆனால் தமிழ்ப் பகுதியின் தொகுதியில் வேலை இல்லாத் திண்டாட்டத்தை சுட்டிக்காட்டி தமிழரசு பாராளுமன்ற பிரதிநிதிகளை குறைகூறுவதற்கு ஒரு தேர்தல் கூட்டம் இப்போது கிளம்பியிருக்கின்றது.

இக்கேள்வியைக் கேட்டு பொதுமக்களை சிலர் ஏமாற்றத் தொடங்கியிருக்கிறார்கள்.

தமிழரசு எம். பி.யை ஆதரித்து என்ன கண்டீர்கள்.

அவரைத்தான் இன்னும் வால் பிடிக்கிறீர்களா?

இப்படிச் சிலர் கேட்கிறார்கள்.

உங்கள் வேலை இல்லாத் திண்டாட்டத்தை எம். பி. தீர்த்தாரா?

உங்கள் மகனுக்கு ஒரு வேலை எடுத்துக்கொடுத்தாரா?

உங்கள் மகளுக்காவது ஒரு வேலை பிடித்துக் கொடுத்தாரா?

உங்கள் மருமகனுக்காவது ஒரு வேலைதேடிக் கொடுத்திருக்கக் கூடாதா?

இப்படி பொதுமக்களை சிலர் கேட்கத் தொடங்கி இருக்கிறார்கள்.

அவர்களைப் பார்த்து கேட்கின்றோம்: வேலை இல்லாத் திண்டாட்டத்தை தம் தொகுதியில் தீர்த்துவைத்த ஒரு எம்.பியை நாட்டில் காட்டமுடியுமா?

அல்லது வேலை இல்லாத் திண்டாட்டத்தை தம் தொகுதியில் இல்லாமல் செய்த ஒரு மந்திரியை காட்ட முடியுமா?

கல்குடா தொகுதியில் படித்த வாலிபருக்கெல்லாம் வேலை கிடைத்துவிட்டதா? வேலை இல்லா திண்டாட்டம் முடிந்து விட்டதா?

கல்வி மந்திரியின் குளியாப்பிட்டி தொகுதியிலே வேலை இல்லா திண்டாட்டம் தீர்ந்து விட்டதா? பட்டதாரிக்கெல்லாம் வேலைகிடைத்துவிட்டதா?

தொழில் மந்திரியின் பொரளை தொகுதியில் வேலை இல்லாத் திண்டாட்டம் முடிந்துவிட்டதா?

பிரதமரின் டெடிகமை தொகுதியில் வேலை இல்லாத் திண்டாட்டம் தீர்ந்துவிட்டதா?

இல்லை ... இல்லை ... இல்லை ... இல்லை ...

ஆனால் தமிழரசார் தொகுதிகளில் மட்டும் தீர்க்கவில்லையாம், இந்த எம். பி. களால் அதைச் செய்ய முடியாதுதாம்!

இப்படிச் சிலர் சந்திக்கு சந்தி மூலைக்கு மூலை ஏதோ பெரிய உண்மையைக் கண்டுபிடித்தவர்கள்போல் போடும் கூச்சலின் உட்கருத்தினை பொதுமக்கள் அறியாமலில்லை.

வேலை இல்லா பிரச்சினையை பெரிதாக்கி காட்டி தமிழ் பேசும் மக்களின் விடுதலை உணர்வை குழிதோண்டிப் புதைக்க பகல் வேஷம் போடும் அரசியல்வாதிகளின் சுய உணர்வை மக்கள் அறியாமலில்லை.

நாடாளும் மந்திரிமாரும், நாட்டின் பிரதமரும், அரசாங்கமும் தீர்த்துவைக்க முடியாமல் திணறும் வேலை இல்லா பிரச்சினையை தீர்த்து வைக்கப் போகிறார்களாம். பலே கெட்டிக் காரர்கள்...

—செ. தெய்வநாயகம்
(ஆரையம்பதி கி. ச. உறுப்பினர்)

பட்டிருப்புத் தொகுதியில்

## சாதிவெறிக்கு சாவுமணியடிக்க இளைஞர்கள் உறுதி!

பட்டிருப்பு ஏப். 6—

சாதியின் பெயரைச் சொல்லி மக்களை ஏமாற்றிய காலம் மலையேறிவிட்டது. பட்டிருப்புத் தொகுதி மக்கள் இன உணர்ச்சியுடையவர்கள். 'எட்டப்பர் கூட்டமே உங்களால் எங்களை இனிமேலும் ஏமாற்ற முடியாது' என்கிறார்கள் பட்டிருப்புத் தொகுதி இளைஞர்கள்.

தனித் தமிழ்த் தொகுதியான பட்டிருப்புத் தொகுதி மக்கள், சாதி மத வேறுபாடின்றி எல்லோரும் ஒரே இனம் என வாழ்ந்து ஏனைய தொகுதி மக்களுக்கு முன் மாதிரியாக வாழ்பவர்கள். இத்தகு பெருமைக்குரியவர்களைச் சின்னபின்னப்படுத்த சில சுய நலமிகள் மீண்டும் கங்கணம் கட்டத் தொடங்கி விட்டார்கள். இவர்களுக்கு இத்தொழில் பரம்பரை பரம்பரையாக இருந்து வருகின்றது.

தேர்தல் வந்ததும் பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்த படுவான் கரைப் பக்கம்—மண்முனைப்பகுதி—சென்று நான் உங்களுக்குச் சொந்தம், உங்கள் சாதியைச் சேர்ந்தவன் எனக் கூறி அவர்களைப் பந்தம் பிடிக்கத் தொடங்கிவிட்டார்கள். இவர்களால் ஏமாற்றப்படுகின்ற அப்பகுதி மக்கள், இனிமேலும் ஏமாறித் தமது பகுதியைப் பாழடையச் செய்ய மாட்டார்கள் என்பது உறுதியாகிவிட்டது.

சாதி வெறியர்களே! உங்களால் எங்களை எத்தனை காலம் ஏமாற்ற முடியும். மண்முனைப் பகுதியில் சாதி வெறியைக் காட்டுகிறீர்கள். பெரிய கல்லாறு ஒந்தாச்சிமடம், போரதீவு முதலிய இடங்களில் ஒவ்வொரு பொய் கூறுகின்றீர்கள். பச்சையில் மறைந்து தமிழினத்தை விலை கூறுகிறீர்கள். இத்தகையவர்கள் விலாசமில்லாது போனது நிச்சயம் உங்களுக்கு நினைவிருக்கும். அத்தகையவர்களை நினைவுபடுத்தி, சாதி பேசி இனிமேலும் எங்களை ஏமாற்ற முடியாது என பட்டிருப்புத் தொகுதி இளைஞர்கள் சவால்விடத் தொடங்கி விட்டார்கள்.

## தமிழினம் தலை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வரைக் கொண்டுவந்து குடியேற்றி அந்தப் பகுதிக்குரிய மக்களை அதன் மூலம் சிறுபான்மையோராக்கினால் அதுவே இனப் படுகொலைக் கொப்பாகும். அதுவும் ஒரு நாட்டிலே, இன அடிப்படையிலே ஆளும் இனத்தவர்களே குடியேற்றப்பட்டுவிட்டால் வேறு வினை வேண்டியதில்லை. மறுக்கமுடியாத ஆதாரபூர்வமான இனப் படுகொலை அதுவேயாகும்.

காரணம், ஆளுகிறவர்கள், மற்ற இனத்தை, ஆளப்படுகிறவர்களை அழித்தொழிக்க மார்க்கமுண்டு. அந்தச் சமூகத்தின் அமைப்பையே உருக்குலைத்துவிட ஆளுகிறவர்களால் முடியும். அந்த இனத்தின் கலாசாரத்தைத் தொலைத்துவிடலாம். அவர்கள் மதம், அவர்கள் முன்னேற்றம் அனைத்தையுமே இல்லாது அகற்றிவிடலாம். இப்படியே அந்த இனத்தின் முடிவு நிர்ணயிக்கப் பட்டுவிடும். இதுவே நூற்றுக்கு நூறு இனப்படுகொலை ஆகும்.

(வளரும்)

சுதந்திரன்
SUTANTIRAN

## 'தேசியம்' பேசும் யூ. என். பி. ஆட்சியில்

# தமிழ்க்கொலையும் சிங்களத் திணிப்பும் தொடருகிறது!

யூ. என். பி. கட்சியினரால் தமிழ் மொழி மூற்ருக வேண்டுமென்றே கொலை செய்யப்பட்டும் கொச்சைத் தமிழ் வார்த்தைகளைக் கொண்டும் அச்சிடப்பட்டும் தேர்தல் பிரசார விளம்பரம் ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டு இருந்தமையினை சுட்டிக்காட்டி கடந்த 2-4-70 முதல் முதன் 'சுதந்திரனில்' மட்டும் வெளியான புகைப்படத்தை வாசகர்கள் கண்ணுற்றிருப்பார்கள்.

இதே யூ. என். பி. கட்சியின் ஆட்சியில் இயங்கிவரும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களிலும் தமிழ் மொழி கொலை செய்யப்பட்டும் திட்டமிட்டே புறக்கணிக்கப்பட்டும் வருகின்றதென்பதை இங்கே இரண்டாவதாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கும் புகைப்படம் எடுத்துக் காட்டுகிறது.

இப் பெயர்ப் பதிப்பு என்ன தெரியுமா? இதுதான் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களில் பொருட்கள் வாங்கும் அதிகப்படியான தமிழ் பேசும் மக்கள் உட்படப் பலரும் பெற்றுச் செல்லும் 'பொருட்பை'யாகும்.

இந்தக் காகிதப்பைகளில் தமிழ் மொழி கொலை செய்யப்பட்டிருப்பதைக் கவனித்துப் பாருங்கள். 'பொருட்களுக்கு' என்ற தமிழ்பதம் 'பெருட்களுக்கு' என்றும், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் என்ற வாசகங்களைக் குறிக்கும் சுருக்கெழுத்துக்களான கூ. மொ. வி. என்பவற்றிற்குப் பதிலாக கூட்டுறவு மொத்த 'ஸங்ஸ்தாவ,' என்ற சிங்களப் பதம் பிரதிபலிக்கக்கூடியதாக கூ. மொ. ஸ. என்ற சுருக்கெழுத்துக்கள் அச்சிடப்பட்டு இன்றும் வினியோகிக்கப்பட்டு வருகின்றன.

இப்பிரசுரம் அண்மையில் புதிப்பிக்கப்பட்டவற்றில் ஒன்றென்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தமிழ் மொழி பலதுறைகளிலும் படுகொலை செய்யப்படுவது தமிழ் மக்களுக்கு வேதனையூட்டும் செயலென இலங்கைத் தமிழணிச் சபை கருதுகிறது.

இவைபற்றி நடவடிக்கை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள இருப்பதாகச் சபையின் பொதுச் செயலாளர், திரு. சிவ, நவஜோதி அவர்கள் தெரிவித்திருக்கிருர். அண்மையில் கொழும்பு மத்திய பகுதியிலுள்ள ஆமர் வீதியிலும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கூ. மொ. வி. நிலையத்திலும் கூட பெயர்ப் பலகைகள், அறிவுறுத்தல்கள் மற்றும் சுலோகங்கள் அனைத்தும் தனிச் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே இடம்பெற்று இருப்பது பற்றியும் சுட்டிக் காட்ட இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

සතොස

අනර්ඝත්වය සහ අඩුමිල සඳහා

திரமையும் நியாயமான விலையுமுடைய பெருட்களுக்க

for quality & fair price

சதொஸ C.W.E

## இயக்க கொடியை இரும்பு மனிதர் ஏற்றிவைப்பார்!

### சாவகச்சேரி மாநாடு நிகழ்ச்சிகள்!

சாவகச்சேரி, ஏப். 8—

இம் மாதம் 20, 21, 22 திகதிகளில் சாவகச்சேரியில் நடைபெறவிருக்கும் தமிழரசுக் கட்சி வாலிபர் மாநாடு, இளந் தமிழர் மாநாடு, மாதர் மாநாடு சம்பந்தமான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. தமிழரசுக்கட்சியின் கடமை வீரர் வ. ந. நவரத்தினமும் சாவகச்சேரித் தொகுதி தமிழரசுக் காளையரும் மாநாட்டு வெற்றிக்காக இரவு பகலாக உழைத்து வருகின்றனர்.

மாநாட்டுக்கான திட்டங்கள் தீட்டப்பட்டு விட்டன. சாவகச்சேரித் தொகுதியில் மட்டுமன்றி வடபகுதி முழுவதும் மாநாடு பற்றியே மக்கள் பேசிக்கொள்கின்றனர்.

மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சி 20-4-70ல் ஆரம்பமாகிறது. அன்று காலை 6 மணிக்கு தொகுதியின் பல பகுதிகளிலுமிருந்தும் விடுதலை உணர்ச்சி கொண்ட வீரக் காளையர் கூட்டம், மரதன் ஓட்டத்தை ஆரம்பிக்கும். மரத ஓட்ட வீரர்கள் காலை 7.30 மணிக்கு சாவகச்சேரி தொகுதி தமிழரசு அலுவலகத்தை வந்தடையும்.

ஈழத் தமிழினத்தின் இலட்சியப் பாசறையாம் தமிழரசுக் கட்சியின் இரும்பு மனிதர்—இன்பத் தமிழுக்காக—தாய்த் தமிழ் நாட்டுக்காக—தமிழர் வாழ்வுக்காக பொலிசாரின் குண்டாந்தடி முறியுமளவுக்கு இரத்தம் கொட்ட அடிபட்டு இளங்காத்த ஏந்தல் — தமிழினத்தின் நலன் முழுவதையும் தன்னந்தனியே நின்று பாதுகாக்கவும் தமிழ் எதிரிகளை தூள்தூளாக்கவும் வல்ல செயல் வீரர்—நல்லூர் தந்த நன் முத்து—வைத்திய கலாநிதி இ. மு. வி. நாகநாதன் தமிழரசுக் கட்சியின் மூவண்ணக் கொடியை ஏற்றிவைப்பார். (ஏனைய நிகழ்ச்சிகள் விபரங்கள் நாளை)



## அத்தானின் மண்டபம்

'அத்தான்.........'

'கண்ணே.........'

'உங்களிடம் நான் சில கேள்விகள் கேட்கிறேன்... இரண்டே வார்த்தைகளில் பதில் தருவீர்களா?'

'அதற்கென்ன... தாராளமாகத் தருகிறேன்'

'அத்தான்...... அரசாங்கம் இப்போது கல்குடா தொகுதியோடு ஒட்டினூற் போல இருக்கும் பைந்தமிழ்ச் சிற்றூரான ஈச்சிலம்பத்தைக் கிராமத்தைச் சிங்களப் பகுதியோடு சேர்த்திருக்கிறதாமே......? இது என்ன அத்தான்?'

'யு. என். பி. ஜனநாயகம்!'

'அத்தான்...... அரசாங்கம் இப்போது தமிழினத்தை முற்ருக அழிக்கும் வகையில் கல்குடா தொகுதியில் உள்ள செந்தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் படிப்பிக்க ஆசிரியர்களைத் துணிச்சலாக அனுப்பி இருக்கிறதாமே ......இது என்ன அத்தான்?

'யு. என். பி. ஜனநாயகம்!'

'அத்தான்...அரசாங்கம் இப்போது மீன் பிடிக்கும் சாட்டில் கிழக்கு இலங்கைத் தமிழ்ப் பிரதேசத்தில் குடியேறும் சிங்களவருக்கு கல்குடா தொகுதியில் அதிக ஒத்துழைப்பைக் கொடுத்து உற்சாகப் படுத்தி வருகிறதாமே...... இது என்ன அத்தான்?'

'யு. என்.பி. ஜனநாயகம்!'

'அத்தான்...... அரசாங்கம் இப்போது கல்குடா தொகுதியிலுள்ள தமிழ் உணர்ச்சி மிக்க ஆசிரியர்கள் தமிழ் உரிமை பற்றிப் பேசும் அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் அனைவரையும் கல்குடாத் தொகுதிக்கு வெளியே தொலைதூரத்துக்குக் கொடுமையாக இடமாற்றம் செய்து அவர்தம் குடும்பங்களைச் சிதறடித்துத் துன்புறுத்துகிறதாமே...... இது என்ன அத்தான்?'

'யு. என். பி. ஜனநாயகம்!'

'அத்தான்...... அது சரி, இத்தனை கொடுமையான சிங்கள இனவெறி கூத்தாடும் கல்குடா தொகுதியில் இம்முறை தேர்தலில் தமிழர்களின் வாக்குகளைக் கேட்க வருபவர் யார் அத்தான்?'

'யு. என். பி. தேவநாயகம்!

### "அல்அக்ஸா . . .

(1-ம் பக்க தொடர்ச்சி)

டிருந்த முஸ்லிம் மக்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் போதிய விளக்கம் அளிந்தார்கள் திரு. இராசதுரையும், திரு. மாணிக்க வாசகரும்; தமிழரசுத் தலைவர்களின் விளக்கம் கேட்டு முஸ்லிம் மக்கள் திருப்தியடைந்தனர். இம்முறை கல்குடா முஸ்லிம் மக்களின் ஆதரவு திரு. மாணிக்கவாசகருக்கே என்பதை இச்சந்திப்பு உறுதிப்படுத்துவதாயிருந்தது.

திரு. இராசதுரை பேசும் போது கூறியதாவது:

"தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் மட்டுமல்ல, கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து மொத்தம் 18 பேர் கையெழுத்திட்டு பல்கலைக் கழகம் ஒன்று திருமலையில் நிறுவப்படவேண்டுமென்று ஏற்கனவே அரசாங்கத்திடம் மகஜர் சமர்ப்பித்தோம். அந்த மகஜரில் கையெழுத்திட்டு பல்கலைக் கழகம் திருமலையில் அமையவேண்டுமென்று விரும்பியவர்களே இன்று அதை எதிர்க்கிருர்கள்.

"பல்கலைக் கழகம் வடக்கிலா கிழக்கிலா என்ற பிரச்சினைக்கு சுமுகமான முடிவு காண வேண்டும் என்றே இரண்டுக்கும் மத்தியமானதும், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்ததுமான திருமலையில் நிறுவவேண்டுமென்று தமிழரசுக் கட்சி விரும்புகிறது.

"வடக்கில் இந்து பல்கலைக் கழகம் ஒன்று நிறுவப்படவேண்டுமென்ற கோரிக்கைக்கு பத்து வருட காலமாக எதிர்ப்புத் தெரிவித்து வரும் தமிழரசுக் கட்சி சமய அடிப்படையிலான கலாசாரப் பல்கலைக்கழகம் ஒன்றைவிட தமிழ் பேசும் சகல இன மக்களும் பலதுறைக் கல்வியையும் பயிலக்கூடிய பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக் கழகத்தையே விரும்புகிறது.

"ஜனுப் முகம்மதலியின் பிரேரணைக்கு தமிழரசுக் கட்சி ஆதரவளிக்கா விட்டாலும் முஸ்லிம்களுக்காக இஸ்லாமிய கலாசார பல்கலைக் கழகம் ஒன்று கிடைப்பதற்கு தமிழரசுக் கட்சி எக்காரணத்தைக் கொண்டும் தடையாக இருக்கமாட்டாது என்று தமிழரசு தலைவர் திரு. சா. ஜே. வே, செல்வநாயகம் பத்திரிகை அறிக்கைகள் மூலம் அப்போதே கட்சியின் நிலையைத் தெளிவுபடுத்திவிட்டார்" என்று கூறினர்.

### காங்கிரஸ் கோட்டை......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மிகப் பிரமாண்டமான கூட்டமொன்றை அவ்வூர் மக்கள் கூட்டி தமிழரசு வேட்பாளர் திரு. ஜெயக்கொடியை ஆதரித்து வரவேற்றுப் பணமுடிப்பும் அளித்துக் கௌரவித்துள்ளனர்.

இம்முறை சிவசிதம்பரம் தலைகீழாக நின்ருலும் மாலை சந்தியில் அவரைக் கூட்டம் வைக்க விடுவதில்லை என்று மக்கள் உறுதி பூண்டுவிட்டனராம். எனவே எப்படியும் அவ்வூர் மத்தியில், தனியாருக்குச் சொந்தமான காணியிலாவது கூட்டம் வைப்பதற்கு சிவசிதம்பரம், பொன்னரையும் கூட்டிக் கொண்டு பம்பரமாக ஓடித்திரிகிருர். இம்முறை இவரது புருடா எம்மிடம் பலியாது என அவ்வூர் மக்கள் கங்கணம் கட்டி நிற்கிருர்கள்.

### திருமலைக் கொடி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாரினுல் கைப்பற்றப்பட்ட கொடிகள் யாவும் மீளக் கிடைத்தன. இச் சம்பவத்தின் போது போலிசார் நடந்துகொண்ட விதம் ஒரு சில தவறுகளை உள்ளடக்கியே உள்ளது என்பதும் ஒத்துக் கொள்ளப்பட்டது.

போலிசாரின் இத்தகைய நடவடிக்கைகளுக்குப் பின்னணியொன்று இருந்ததாகப் பரவலாகப் பேசிக் கொள்ளப்படுகிறது: அதாவது, ஐ. தே. கட்சி வாதியொருவர் தங்களுக்கே வாக்களிக்குமாறு தமிழரசுத் தொண்டர் ஒருவரைக் கேட்ட போது உண்டான மறுப்பினுல் ஏற்பட்ட வாக்குவாதம் ஐ. தே. க. வாதியின் இருப்பிடத்துக்கு அருகே இருக்கும் தமிழரசுத் தொண்டர்களை தீவிரப்படுத்தி கொடி பறக்க விடுமளவுக்குத் கொணர்ந்து விட்டது.

'என் இருப்பிடத்துக்கு அருகே தமிழரசுக் கொடி தலை நிமிர்ந்து பறப்பதா?' என்று உள்ளம் பொருமிய அந்த யு என். பி. யின் முருங்கைத்தூண் எடுத்த முயற்சி தானும் மேற்படி நிகழ்ச்சியின் பின்னணி என ஐயுறப் படுகிறது.

### படு கொலை......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மொழித்திணைக்கள ஆணையாளரது கையிலிருந்து பறிக்கப்பட்டு விட்டது.

● சில திணைக்களங்களுக்கு ஆட்களை எடுக்கும் போது ஆங்கில அறிவை அத்தியாவசியமாக்கியது;

● உத்தியோக (சிங்கள) மொழிச்சட்டத்தை மீறும் உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வை நிறுத்தும்படி உத்தியோகமொழி ஆணையாளர் சில கூட்டுத்தாபனத் தலைவர்களிடம் கோரிய போது அவர்கள் அதற்கு மறுத்து விட்டனர்.

● உத்தியோக மொழித் திணைக்களத் தொடர்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் நடைபெறுகிறது.

● உத்தியோக மொழி ஆராய்ச்சிப்பிரிவை மூட முயற்சி செய்தது.

இவ்வாறு அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளதாக 'சன்' ஒரு எழுதியுள்ளது.

## அண்ணமன்றத்தினரின் புத்தாண்டு விழா

பாண்டிருப்பு, ஏப். 8—

பாண்டிருப்பு அறிஞர் அண்ண மன்றத்தினர். எதிர் வரும் புத்தாண்டை முன்னிட்டு 14-4-70ல் முத்தமிழ் விழாவொன்றை விமரிசையாக நடாத்த முடிவு செய்துள்ளனர்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயகவீதி, 194 ஏ இல்லத்தில் 1970.ம் வருடம் ஏப்பிரல் மாதம் 10-ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆசிரியர்: கோவை மகேசன்.